**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 33/2025**
**U/s. 4(1)(c),4(1)(A) TNP Act**
**PROSECUTION WITNESS NO. 3 (LW. 3 )**

| | | |
|---|---|---|
| **Name** | : திருமதி. பகவதி சரணம் **(IO)** | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** | : | **Age : /2025** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. விஜயபிரியா , பெஞ்ச் கிளார்க் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.33/2025 09.01.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.39**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வளாராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.07.2024 ம் தேதி காலை 7.45 மணிக்கு தஞ்சை கீழவாசல் தலைமை காவலர் 1293 திரு. முத்து, முதல்நிலை காவலர் கணேஷ் பாபு ஆகியோருடன் மதுவிலக்கு சம்மந்தமாக கண்காணித்து வந்தபோது CRC டெப்போ அருகில் பின்னால் பெயர் கேட்டு தெரிந்த ஆனந்த் என்பவர் வெள்ளை நிற சாக்கு பையுடன் உக்காந்து இருந்தவரை , போலீசார் எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை வளைத்து பிடித்து பார்க்க அதில் எவ்வித அனுமதியோ உரிமமோ இன்றி விற்பனை செய்வதற்காக 180 மிலி அளவு கொண்ட ஓரியன் பிராந்தி பாட்டில்கள் 26, விற்பனை செய்த பணம் ரூ. 200/- வைத்திருந்தார். எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி வைத்திருந்த மது பாட்டில்களை காரணம் கூறி 7.45 மணிக்கு கைது செய்தும், அதே இடத்தில் தனிநபர் சாட்சிகள் எவரும் முன்வராததால் என்னுடன் வந்த போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் எவ்வித அச்சுறுதலும், வற்புறுத்தலும் இன்றி விசாரிக்க தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆஜர் செய்த பிராந்தி பாட்டில்களை பணத்தையும், மகசரில் கைபற்றினேன். பின்னர் 32 TNP Act ன் படி சம்பவயிடத்தில் கொட்டி அழித்தும், மதுவிற்பனை செய்த பணம் மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து 9.30 மணிக்கு நிலைய குற்ற எண் 562/2024 சட்டபிரிவுகள் 4(1)(c),4(1)(A) TNP Act முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. நிலையம் வந்து பட்டியல் கண்ட சாட்சிகள் முத்து, கணேஷ் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை திரேக பரிசோதனை செய்து தக்க வழிகாட்டுதலுடன் படிவம் 91 மூலம் , நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ 5 , கைப்பற்றுதல் மகசர் அசாஆ 6 , ஒப்புதல்**

**வாக்குமூலம் அசாஆ 7 , படிவம் 91 அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 15.11.2024 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை எதிரி மீது மேற்படி சட்டபிரிவின் கீழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**( எதிரி தரப்பு வழக்கறிஞருக்கு போதிய அவகாசம் அளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் சாட்சியின் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது . )**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.